பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 42

16.07.2026

லஞ்சம் கேட்டு பெற்ற சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கைது

புகார்தாரர் திருமதி.ருஜைனா பாத்திமா, மேலக்கரை, தச்சநல்லூர் தபால், திருநெல்வேலி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் கணவர் அவருடைய வாகனத்தை திரு.ரவிக்குமார் என்பவரிடம் அடமானம் வைத்து கடன் பெற்றிருந்தார். புகார்தாரரின் கணவர் தன்னுடைய வாகனம் தவறாக பயன்படுத்தப்படுவதாக தெரிந்து கொண்டு வாகனத்தை தம் வசம் இருந்த மாற்று சாவி மூலம் எடுத்து வந்து பொள்ளாச்சியில் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைத்திருப்பதாக தகவல் அறிந்ததும் திரு.ரவிக்குமார் பொள்ளாச்சி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்திருந்தார். இது சம்பந்தமாக திருமதி.ருஜைனா பாத்திமா மற்றும் அவரது கணவரின் இரண்டு அலைபேசியையும் திரு.பூபதி, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், பொள்ளாச்சி காவல் நிலையம் அவர்கள் கைப்பற்றி பின்னர் அலைபேசியை திரும்ப ஒப்படைக்கவும் புகாரை முடித்து வைக்கவும் தனக்கு ரூ.70,000/ லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கோயம்புத்தூர் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 16.07.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.பூபதி, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், லஞ்ச பணம் ரூ.70,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

PRESS RELEASE – 42
16.07.2026

SPECIAL SUB-INSPECTOR OF POLICE ARRESTED FOR DEMAND AND ACCEPTANCE OF BRIBE

The complainant Tmt.Rujaina Fatima, is residing at Melakarai, Thachanallur Post, Tirunelveli District. The husband of the complainant had pledged their four wheeler vehicle with one Tr.Ravikumar and obtained a loan. Upon receiving information that the vehicle was being misused, the complainant and her husband used the spare key in their possession, took the vehicle from Ravikumar's custody without his knowledge, and brought it back into their own possession. They thereafter parked the vehicle in a parking lot at Pollachi. In this regard Tr.Ravikumar lodged a complaint at Pollachi Police station. Tr.Boopathy, Special Sub-Inspector of Police, Pollachi Police Station, Coimbatore district. The said SSI took possession of 2 cell phones of Tmt.Rujaina Fatima and her husband and demanded Rs.70,000/- to give back 2 cell phones and to close the complaint. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Coimbatore detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (16.07.2026). During trap proceedings, Tr.Boopathy, Special Sub-Inspector of Police, received the bribe amount of Rs.70,000/- from the complainant. The accused was arrested.